DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 98/2008

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணக்குமார் | Father's/Husband's Name : | பெருமாள்தேவர் |
| Village | : குள்ளப்பகவுண்டன்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) நான் உத்தமபாளையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் சர்வே எண்.882 ல் கட்டுப்பட்ட நிலம் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 ன்படி தாவா சொத்தில் ஒரு பகுதியை கடந்த 29.02.2016 ம் தேதி இளங்கோ என்பவரிடமிருந்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். இளங்கோ சீனித்தேவரின் மகன் என்றால் சரிதான். சீனித்தேவருக்கு வழக்கு சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தை நான் கிரையம் வாங்குதவற்கு எனது துறை அதிகாரிகளிடம் உரிய அனுமதி வாங்கியிருக்கிறேனா என்றால் வாங்கியிருக்கிறேன். அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியரின் 24.02.2016 ம் தேதியிட்ட செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் நடவடிக்கையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் முடிவான SA(MD)No.1023/1964 வழக்கு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

2) தாவா சொத்திற்கு பட்டா வாங்குவதற்காக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விபரங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை 1956 ம் ஆண்டு சீனித்தேவர் கிரையம் வாங்கிய ஆவணத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். UDR ல் ராசுத்தேவர் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய தாசில்தாருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம்

காட்டப்படும் ஆவணம் தான் ராசுத்தேவர் மற்றும் சீனித்தேவர் பெயரில் UDR ன் போது வழங்கப்பட்ட பட்டாவின் உத்தரவு நகல் என்றால் சரிதான். மேற்படி உத்தரவு நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி மேற்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டதாகச் சொன்னார்.

3) மேற்படி வா.சா.ஆ.6 உத்தரவில் சீனித்தேவர் மற்றும் ராசுத்தேவர் வாக்குமூலம் கொடுத்ததாக பதிவு இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் குறிப்பிட்ட நிலங்களை யார் யார் அனுபவம் செய்கிறார்களோ அதனடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக இருக்கிறது என்றால் சரிதான். சீனித்தேவர் வழக்கு சொத்தை ராசுத்தேவர் அனுபவத்தில் இருப்பதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்ததின் அடிப்படையில் சீனித்தேவரின் வாரிசுகள் கொடுத்த மனுவின் பேரில் ராசுத்தேவர் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்ய தாசில்தாருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. பட்டாவை ரத்து செய்யும் அதிகாரம் மாவட்ட வருவாய் அலுவலருக்கு தான் இருக்கிறது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை கிரையம் வாங்கிய பிறகு எனது துறை அதிகாரிகளிடம் கடிதம் கொடுத்து அனுமதி வாங்கியுள்ளேன். அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

4) பி.வா.சா.ஆ.7 சீனித்தேவரின் வாரிசுகளில் ஒருவரான ரத்தினம் எனது மனைவி அனுசுயாவிற்கு தானம் கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் வாங்கிய சொத்திற்கும் உரிய அனுமதி வாங்கியிருக்கிறேன். மேற்படி எனது மனைவி தானமாக வாங்கிய சொத்தை எனக்கு பி.வா.சா.ஆ.14 ஆவணத்தின்படி கடந்த 03.08.2023 ம் தேதி தானமாக எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் சீனித்தேவருக்கோ அல்லது எனக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 வில்லங்கச் சான்றிதழில் நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள பிராதை நிராகரிக்க வேண்டுமென்று சீனித்தேவரின் மகன் குணசீலன் (1 ம் பிரதிவாதி) என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

5) பி.வா.சா.ஆ.18 அ பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.892ல் சீனித்தேவருக்கு 40 செண்ட் நிலம் மட்டும் தான் பாத்தியம் என்பதால் அவரது பெயர் பதிவாகியிருக்கிறது என்றால் சரியல்ல, மொத்தமும் பாத்தியம். பி.வா.சா.ஆ.19 ரத்தினம் பெயரில் உள்ள அடங்கல் கணக்கு தவறாக வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த பாத்தியமும் இல்லாமல் பட்டா வழங்கக்கோரி நான் மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ராசுத்தேவர் 03.08.1961ம் தேதியிலிருந்து அனுபவம் செய்து வந்து அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1994ம் ஆண்டு அவரது வாரிசுகள் 40 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்துவிட்டார்கள். 1994ம் ஆண்டுக்கு முன்பே 1992ம் ஆண்டு வாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை கிரையம் வாங்கியதிலிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் நான் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு அவருக்கு இடைஞ்சல் செய்து வருவதால் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல,

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 04.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.06.04 17:48:48 +0530

District Munsif,
Aundipatti.